# அரச போட்டிப் பரீட்சைக்கான வினாவிடைத் தொகுப்பு

★ கூட்டுறவுப்பரிசோதகர் தரம் II 'அ' வுக்கானது.

★ எழுதுவினைஞர் சேவை தரம் II க்கானது.

★ பண்டகசாலைக் காப்பாளர்.

★ க.பொ.த(உ/த) வகுப்புக்கான பொது அறிவுப்பரீட்சை.

★ ஏனைய பொது பரீட்சைக்குமான வழிகாட்டல்.

வெளியீடு:
வசீகரன்ஸ் பப்பிளிக்கேசன்ஸ்
கோண்டாவில்

விலை: 90/=

[ வினாவிடைத் தொகுப்பு பிரபல ஆசிரியர்களினாலும் கூட்டுறவு மற்றும் அரசாங்க நிர்வாக உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் ஆக்கப்பட்டது]

**கிடைக்கும் இடங்கள்:**

- பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
- மது கல்வி நிலையம் - கோப்பாய்
- கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கம்
- வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

## நலத்துறையில் நிறுவன ரீதியான அபிவிருத்தி

- 1859 சிவில் மருத்துவத் திணைக்களம் நிறுவப்பட்டமை.
- 1864 கொழும்பு பொது வைத்தியசாலை நிறுவப்பட்டமை
- 1879 டீ சொய்சா மகப்பேற்று வைத்தியசாலை நிறுவப்பட்டமை
- 1910 லேடி றிஜ்வே நினைவு வைத்தியசாலை நிறுவப்பட்டமை
- 1913 சுகாதாரத் திணைக்களம் அமைக்கப்பட்டமை.
- 1926 மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் பணியாளரின் கீழ் சிகிச்சை மற்றும் தடுப்புப் பணிகளை இணைத்தமை.
- 1931 மருத்துவப் பணிகள் மற்றும் பொதுநலம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக நல அமைச்சர் ஒருவரை நியமித்தமை.
- 1950 காசில் வீதி மகப்பேற்று வைத்தியசாலை திறக்கப்பட்டமை.
- 1952 தேசிய மருத்துவப் பணிகள் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை
- 1953 குடும்பத் திட்டமிடல் அமைப்பை நிறுவியமை
- 1955 நலப்பணிச் சபையினை மதியுரைக் குழு ஒன்றாக நிறுவியமை
- 1961 ஆயுர்வேத மருத்துவ சபை நிறுவியமை.
- 1964 அரச வைத்தியர்களின் தனிப்பட்ட சிகிச்சை முறை தடைசெய்யப்பட்டமை
- 1966 நலத் திணைக்களம் நல அமைச்சுடன் இணைக்கப்பட்டமை
- 1970 குடும்ப நலப் பணியகம் நிறுவப்பட்டமை.
- 1971 அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நிறுவப் பட்டமை.

- 1972 நலக் கல்விப் பணியகம் நிறுவப் பட்டமை.
- 1978 அல்மா - ஏரிஏ மாநாடு- ஆரம்பநலக்கவனிப்பு அணுகுமுறையினை எற்றுக் கொண்டமை. மருந்துகளின் இறக்குமதி தாராளமாக்கப் பட்டமை.
- 1979 சிறி ஜயவர்த்தனபுர போதனா வைத்தியசாலை நிறுவப் பட்டமை.
- 1979 அரச வைத்தியர்கள் தனிப்பட்ட வைத்தியம் செய்யஅனுமதிக்கப்பட்டமை.
- அமைச்சர்களிடையே தேசிய சுகாதார அபிவிருத்திக் குழு நிறுவப்பட்டமை.
- 1980 நல அபிவிருத்திக்கான சாசனம் கையெழுத் தாகியமை. தேசிய சுகாதாரக் கழகம் நிறுவப்பட்டமை.
- 1981 ஆரம்பநலக் கவனிப்புக்காக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நிறுவப்பட்டமை.
- 1889 கல அமைச்சும் போதனா வைத்திய சாலைகளும் இணைக்கப்பட்டமை.
- 1990 மாகாணசபைச் சட்டத்தின் கீழான அதிகாரப் பகிர்வுடன் நலம் சம்மந்தமான நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டமை.
- 1992 தேசிய நலக் கொள்கையை ஒழுங்கமைப் பதற்காக சனாதிபதி செயலணிக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.
- 1996 நலக் கொள்கை வரைவு தயாரிக்கப் பட்டமை.
- 1997 நல உபாயத்தையும் செயற்பாட்டுத் திட்டத் தையும் ஒழுங்கமைப்பதற்கென ஜனாதிபதி செயலணிக் குழுவொன்று நியமிக்கப்பட்டமை.

## அஞ்சல் துறையில் முக்கிய நிகழ்வுகள்

1948 அஞ்சல் வினியோகத்திற்காக திணைக்கள வாகனப் பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1949 கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் உள்நாட்டு வான் அஞ்சல் பணிகள் தொடக்கப்பட்டன.

அரச ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பொறுப்பேற்கப்ப பட்டன.

1958 சிங்கள எழுத்துக்களை முனைப்பாகக் கொண்ட முதலாவது தொகுதி அஞ்சல் முத்திரைகள் வெளியிடப்பட்டன.

1972 1972ம் ஆண்டில் 30ம் இலக்கச் சட்டத்தின்படி அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி தேசிய சேமிப்பு வங்கியாக மாற்றப்பட்டது.

1976 பொதுநலவாய அஞ்சல் நிருவாகிகளின் 3ஆவது மாநாடு கொழும்பில் நடத்தப்பட்டது.

1979 இலங்கை ஆசியா பசுபிக் அஞ்சல் ஒன்றியத்தில் இணைந்தது.

1981 அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்தினை வெவ்வேறாக்கியதன் மூலம் அஞ்சல் திணைக்களம் நிறுவப்பட்டது.

1981 தனியார் துறையினர், முகவர், அஞ்சல் அலுவலகங்களை நிறுவ அனுமதிக்கப்பட்டனர்.

கடுகதி அஞ்சல் பணி அறிமுகப்படுத்தப்பட்டது.

அஞ்சல் (f)பக்ஸ் பணி அறிமுகப்படுத்தப்பட்டது.

1996 அஞ்சல் குறியீடு எண்கள் அறிமுகப்படுத்தப்பட்டன

புதிய தபால் தரம் பிரித்திடும் மத்திய பரிவர்த்தனைக் கட்டடம் திறக்கப்பட்டது.

## முக்கிய ஊட்டச்சத்துத் தலையீடுகள்.

1942 அரிசி பங்கீட்டுத் திட்டம் தொங்கப்பட்டது.

1945 பள்ளிக்கூடச் சிறார்களுக்கான நண்பகல் உணவு தொடங்கப்பட்டது.

1965 பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்கல் ஏற்பாடு.

1968 பள்ளிக்கூட விசுக்கோத்து நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது.

1973 திரிபோசா நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது.

1978 உணவு முத்திரைத் திட்டம் தொடக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சிறார் அவசரகால நிதியத் துடனான வளர்ச்சிப்பேணல் நிகழ்ச்சித்திட்டம்

1980 இலவசக் கஞ்சி நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது

சோயா மற்றும் சோயா உற்பத்திப் பொருட்களையும் சிறகு அவரையையும் பிரபல்யப்படுத்தல்

1989 பள்ளிக்கூட நண்பகல் உணவு நிகழ்ச்சித்திட்டம் மீளத் தொடங்கல்

1990 சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. நண்பகல் உணவுக்குப் பதிலாக பள்ளிக்கூடச் சிறார்களுக்கு காசு மாற்றல்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

1992 சிறார்களின் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டது.

1993 நண்பகல் உணவு காசு மாற்றல் உணவு முத்திரையில் உள்ளடக்கப்பட்டது.

ஊட்டச்சத்து மீதான தேசிய தொழில் நுட்பக் குழு நிறுவப்பட்டது.

1995 சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது.

## நோய்த்தடை நலக் கவனிப்பு அபிவிருத்தி முக்கிய நிகழ்வுகள்.

- ✖ 1966 பெரியம்மை நோய் தடுப்பு மருந்தின் அறிமுகம்.
- ✖ 1945 காசநோய் எதிர்ப்பு இயக்கம் நிறுவப்பட்டமை.
- ✖ 1946 மலேரியாவுக்கெதிராக டி.டி.ரி மருந்து தெளித்தல் அறிமுகம்.
- ✖ 1947 ஆனைக்கால் நோய், நோய் எதிர்ப்பு இயக்கம் நிறுவப்பட்டமை.
- ✖ 1949 மலேரியா எதிர்ப்பியக்கம் நிறுவப்பட்டமை.
- ✖ 1949 காசநோய் தடுப்பு மருந்தான பி.சி.ஜி அறிமுகம்.
- ✖ 1954 தொழுநோய் எதிர்ப்பியக்கம் அறிமுகப்படுத்தப் பட்டது.
- ✖ 1961 தொண்டை அழற்சிநோய், கக்குவான் இருமல், ஏற்பு நோய் என்பவற்றுக்கான தடுப்பு மருந்தின் அறிமுகம்.
- ✖ 1962 வாய் மூலமான இளம்பிள்ளைவாத நோய் தடுப்பு மருந்தின் அறிமுகம்.
- ✖ 1965 பெரியம்மை ஒழிப்பு.
- ✖ 1966 முதல் முறையாக டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டமை.
- ✖ 1969 கற்பிணித் தாய்மாருக்கான ஏற்புத்தடை மருந்து அறிமுகம் செய்யப்பட்டமை.
- ✖ 1977 மலேரியாவுக்கெதிரான இயக்கத்தில் மலத்தியோன் பாவனை ஆரம்பிக்கப்பட்டமை.
- ✖ 1978 தொற்று நோய்த்தடை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை.
- ✖ 1979 குடும்பத் திட்டமிடலுக்கான பண ஊக்கு விப்புகள் வழங்கப்பட்டமை.

- 1983 சின்னமுத்து நோய் நோய்தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டமை.
- 1985 தொற்று நோய்த்தடை நிகழ்ச்சித் திட்டம் விரைவு படுத்தப்பட்டமை.
- 1987 இலங்கையின் முதன் முதலாக எயிட்ஸ் நோய் ஏற்பட்டமை.
- 1989 சின்னமுத்துத் தடை மருந்தேற்றல் நிகழ்ச்சித் திட்டத்தினை தொர்புசாதனங்களின் உதவியுடன் விரைவு படுத்தப்பட்டமை.
- 1989 உலகளாவிய குழந்தை தொற்று நோய்த்தடை நிகழ்ச்சித் திட்ட நோக்கினை அடைதல்.
- 1990 தொழு நோய் ஒழிப்பு இயக்கத்தில் சமூக நடமாடல் அணுகு முறையினை அறிமுகப் படுத்தியமை.
- 1994 எச்.ஐ.வி/எயிட்ஸ் கட்டுப்பாடு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- 1995 இளம்பிள்ளைவாத நோய்க்கான தேசிய தடுப்பு தின நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிறுவனம் அமைக்கப்பட்டது.

[இது 1996 இலும் 1997 இலும் தொடர்ந்தது]

## உலக நாடுகள் சிலவற்றின் தேசிய தினங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | குடியரசுதினம் | ஜனவரி | 26 |
| இலங்கை | சுதந்திரதினம் | பெப்ரவரி | 4 |
| மொரிசியஸ் | குடியரசுதினம் | மார்ச் | 12 |
| பாகிஸ்தான் | பாகிஸ்தான்தினம் | மார்ச் | 23 |
| பங்களாதேசம் | தேசியதினம் | மார்ச் | 26 |
| சிம்பாப்வே | சுதந்திரதினம் | ஏப்ரல் | 18 |
| இஸ்ரேல் | தேசியதினம் | மே | 4 |
| எத்தியோப்பியா | தேசியதினம் | மே | 28 |
| ருவாண்டா | சுதந்திரதினம் | ஜுலை | 5 |
| பிரான்ஸ் | தேசியதினம் | ஜுலை | 14 |
| மாலைதீவு | குடியரசுதினம் | ஜுலை | 26 |

| | | | |
|---|---|---|---|
| சிங்கப்பூர் | தேசியதினம் | ஆகஸ்ட் | 9 |
| ஆப்கானிஸ்தான் | சுதந்திரதினம் | ஆகஸ்ட் | 19 |
| மலேஷியா | மலேஷியதினம் | ஆகஸ்ட் | 31 |

- சந்திரனில் முதன்முதலில் காலடி எடுத்து வைத்தவர் நீல்ஆக்ம்ஸ்ட்ரான் (அமெரிக்கா - 1969)
- முதன்முதல் செயற்கைக் கோள் விட்ட நாடு ருஷ்யா
- முதன்முதல் விண்வெளி சென்றவர்
- முதன்முதல் விண்வெளிக்குச் சென்ற பெண்மணி வாலண்டினாதெரஸ்கோவா
- சந்திரனை நோக்கி முதன்முதல் விண்வெளிக்கலம் விட்ட நாடு. ருஷ்யா
- இந்தியாவின் முதலாவது பெண் பிரதமர் திருமதி.இந்திராகாந்தி.
- ஆங்கிலக் கால்வாயை முதன்முதல் நீந்தய பெண்மணி ஆரதி - சாகா
- எவரஸ்ட் சிகரத்தை முதலில் அடைந்தவர் டென்சிங்
- சீனக் குடியரசின் முதல் தலைவர் சன்யடைசன்
- சீன மக்கள் குடியரசின் முதல் தலைவர் மாசேதுஸ்
- விண்வெளிசென்ற முதல் பத்திரிகையாளர் விட்டாலி
- விண்வெளி சென்ற முதல் மருத்துவர் டாக்டர் ஜோசப்கோவின்.
- இலங்கையின் முதலாவது ஜனாதிபதியின் பெயர் என்ன? திரு.வில்லியம்கோபல்லவ (1972 முதல் 1978 வரை)
- வேறுபட்ட காலங்களில் ஜனாதிபதி பிரதமர் பதவிகளை வகித்த குடும்பத்தினர் பெயர் என்ன? எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க குடும்பம்.
- ரணில் விக்கிரம சிங்க பிரதமராகப் பதவி வகித்த ஆண்டு எது? 1993ம் ஆண்டு

- இலங்கையின் தற்போதய பிரதம நீதியரசரின் பெயர் என்ன? *சரத்.என்.சில்வா.*
- திரு.டட்லி சேனானாயக்கா எத்தனை தடவைகள் பிரதமராகப் பதவி வகித்துள்ளார். 4 தடவைகள்.
- இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மொத்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை யாது? 37 கட்சிகள்
- வதிவிட வீடுகளுக்கான வீட்டுடமை வரையறை சட்டம் எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது? 1972ம் ஆண்டு

## இலங்கையின் மகா தேசாதிபதிகள்

சேர் கென்றி மொங்
மாண்புமிகு வைகவுண்ட் சோல்பறி
சேர்.ஒலிவர் குணதிலக்க
திரு.வில்லியம் கோபல்லவ

## இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள்

திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா
திரு.ஆர்.பிறேமதாசா
திரு.டி.பி.விஜயதுங்கா
திருமதி.சந்திரிக்காபண்டாரநாயக்க குமாரதுங்க.

## இலங்கையின் பிரதமர்கள்

அதிகௌரவ மாண்புமிகு டீ.எஸ்.சேனநாயக்கா
திரு.டட்லி சேனநாயக்க
அதிகௌரவ மாண்புமிகு சேர் ஜோன்.கொத்தலவல
திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா
திரு.டபிள்யூ திசநாயக்க
திருமதி.ஆர்.பண்டாரநாயக்கா
திரு. ரணில்விக்கிரமசிங்க.
திருமதி.சந்திரிக்காபண்டாரநாயக்க குமாரதுங்க.

* இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?
ஆதிகௌரவ மாண்புமிகு டீ.எஸ்.சேனநாயக்க. (1948 முதல் 1952 வரை)

* உலகின் முதலாவது பெண் பிரதமர் யார்?
இலங்கைப் பிரதமர்
திருமதி சிறிமாவோ ஆர்.டீயஸ. பண்டாரநாயக்க

* இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதியின் பெயர் என்ன?
ஜே.ஆர். ஜெயவர்த்தனா. (1978 முதல் 1989 வரை)

* உலகின் முதல் செயற்கைக் கோள் ஸ்புட்னிக் ரஷ்யாவினால் செலுத்தப்பட்டது.

## கூட்டுறவுக் கொள்கைகள்

றொச்டேல் முன்னோடிகளின் கூட்டுறவுக் கொள்கைகள் எட்டு :-

1) பொதுவான தடையற்ற அங்கத்துவம்
2) ஜனநாயக முறையில் அமைந்த நிருவாகமும் கட்டுப்பாடும்.
3) சந்தை விலைக்கே பண்டங்களையும் சேவைகளையும் விற்பனை செய்தல்
4) உடன் பணத்துக்கே விற்பனை செய்தல்.
5) மூலதனத்துக்கு மட்டான வட்டி வழங்குதல்.
6) இலாபத்தில் அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்ப தள்ளுபடி வழங்குதல்.
7) அங்கத்தவர் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்.
8) அரசியல் சமய விடயங்களில் கோஷ்டி சேராது கண்டிப்பான நடுநிலைமையைப் பின்பற்றுதல்.

**1937ம் ஆண்டு அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனத்தாற் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகள் ஏழு :-**

1) எல்லோருக்கும் தடையற்ற அங்கத்துவ அனுமதி.
2) குடியாட்சி முறையிலமைந்த நிருவாகம்.

3) மூலதனத்துக்கு மட்டான வட்டி.
4) அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்ப இலாபத்தில் தள்ளுபடி வழங்கல்.
5) கூட்டுறவுக் கல்விக்கு வசதியளித்தல்.
6) அரசியல் சமயச் சார்பின்மை.
7) உடன் பண விற்பனை.

## 1966ம் ஆண்டு அனைத்துலகக் கூட்டுறவு/இணைப்பு நிறுவனத்தாற் பிரகடனப்படுத்தப்பட்ட ஆறு கூட்டுறவுக் கொள்கைகள் :-

1) தன் விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை.
2) ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிருவாகமும்.
3) மூலதனத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட வட்டி வீதம்.
4) இலாபம் (மேலதிகம்) அங்கத்தவரிடையே சமத்துவமாகப் பகிரப்படல்.
5) கூட்டுறவுக் கல்வி.
6) கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒத்துழைப்பு.

## 1995ஆம் ஆண்டு மான்சிஸ்டர் நகரில் இடம்பெற்ற சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் ஏழு :-

1) தன் விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை.
2) ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்.
3) அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு.
4) சுதந்திரமாகவும் சுயமாகவும் தொழிற்படல்.
5) கல்வி, பயிற்சி, தகவல்.
6) கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒத்துழைப்பு.
7) சமூக மேம்பாடு.

# இலங்கை கூட்டுறவு இயக்க வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகள்.

* இலங்கையின் முதலாவது கூட்டுறவு அம்சங்கள் பொருத்திய ஓர் அமைப்பு 1906ம் ஆண்டு தும்பறையில் தெல்தெனியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

* கடன் உதவு சங்கங்கள் அமைப்பதற்கு 1911ம் ஆண்டு கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது.

* முதலாவது கடன் உதவு சங்கம் 1912ம் ஆண்டு வெல்லபடபத்து என்னும் கிராமத்தில் பதிவு செய்யப்பட்டது.

* 1913ம் ஆண்டு விவசாய இலாகாவின் பணிப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்யும் பதிவாளராக நியமனம் பெற்றார்.

* 1913ல் இலங்கையின் முதலாவது கூட்டுறவுச் சங்கம் மாத்தறை வெல்லபடபத்து கடன் உதவு சங்கம் எனப் பெயரிடப்பட்டது.

* உள்ளூர் கடனும் அபிவிருத்தி நிதியும் உருவாக்கல் பற்றிய 1916ம் ஆண்டு 220 இலக்க கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் 1916ல் இயற்றப்பட்டது.

* 1920ல் முதன் முதலாக கூட்டுறவுப் பரிசோதகர் நியமனம் வழங்கப்பட்டு அவர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

* கடனுதவு சங்கங்கள் மட்டமல்லாது ஏனைய வகைச் சங்கங்களும் மேல் நிலைச் சங்கங்களும்பதிவு செய்ய ஏற்ற வகையில் கூட்டுறவுக் கடனுதவுக் கட்டளைச் சட்டம் 1921ல் திருத்தி அமைக்கப்பட்டது.

* முதலாவது பதிவு செய்யப்பட்ட மேல்நிலைச் சங்கம் 1924ல் கொழும்பில் கூட்டுறவு மாகாண சமாசம் எனப் பெயரிடப்பட்டது.

* கூட்டுறவுச் சங்கங்களுக்கான இணைப்பதிவாளரான டபிள்யு.கே.எச். கெம்பல் 1926ல் பதவி ஏற்றார்.

✽ 1927ல் முதலாவது கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் தோட்டத் தொழிளாளர் இடையே பசறைத் தோட்டத்தில் ஆரம்பித்துப் பதிவு செய்யப்பட்டது.
இதே ஆண்டில் இலங்கையின் முதலாவது பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம் அளவெட்டியில் உள்ள அருநோதயாக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

✽ இலங்கையின் முதலாவது உச்சநிலைச் சங்கமாக கொழும்பு மாவட்டக் கூட்டுறவுச் சமாசம் முதலாவது கூட்டுறவு மாகாண வங்கி யாழ்ப்பாணத்தில் 1929ல் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.
இதே ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களைப் பரிசோதனை செய்வதற்காக கௌரவ கூட்டுறவுப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

✽ 1930ல் விவசாய இலாகாவில் இருந்து பிரிக்கப்பட்டு தனியாக கூட்டுறவு இலாகா ஆரம்பிக்கப்பட்டது.
இலங்கையின் முதலாவது பால் உற்பத்தியாளர் சங்கம் பொமிலியா என்னும் இடத்தில் 1931ல் ஆரம்பிக்கப்பட்டது.

✽ இலங்கையின் முதலாவது படகு உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் 1933ல் ஆரம்பிக்கப்பட்டது.

✽ யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை விற்பனவுச் சங்கம் யாழ்ப்பாணத்தில் 1934ம் ஆண்டு அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

✽ திரு. டபிள்யு. கே.எச்.கெம்பல் 1935ம் ஆண்டு பதிவாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு திரு.எச.கல்வேட் அவர்கள் ஒரு வருடத்திற்குப் பதிவாளராக நியமனம் பெற்றார்.

✽ 1936ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டங்களை ஒன்றிணைப்பதற்கான திருத்தம் செய்யப்பட்டது.
அதே ஆண்டில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

❋ வட மாகாணகூட்டுறவு மேற்பார்வைச் சங்கம் 1937ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு
அதே ஆண்டில் நிருவாகக் கணக்குப் பரிசோதனை நிதி ஒன்று உருவாக்கப்பட்டது.

❋ 1942ல் இரண்டாவது மகாயுத்தம் காரணமாக ஏற்பட்ட பொருள் தட்டுப்பாட்டின் காரணமாகக் கிடைக்கும் பொருட்களை எல்லா மக்களுக்கும் இலகுவாகக் கிடைக்கச் செய்யும் பொருட்டு அரசு கூட்டுறவுப் பண்டக சாலைகளை அமைக்கும் பிரசார இயக்கத்தை மேற்கொண்டு பல கூட்டுறவுப் பண்டகசாலைகள் பதிவு செய்யப்பட்டது.
இதே ஆண்டில் தென்னை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.
மேலும் இதே ஆண்டில் வட பகுதி விவசாய விளை பொருள் உற்பத்தி விற்பனையாளர் சமாசம் ஆரம்பித்துப் பதிவு செய்யப்பட்டது.

❋ 1943ல் கூட்டுறவுக் கல்லூரி பொல்கொல்லையில் ஆரம்பிக்கப்பட்டது.

❋ 1952ல் இலங்கை மீன் விற்பனைச் சங்கம் உருவாக்கப்பட்டுது.

❋ 1947ல் விவசாய விளை பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களை உருவாக்கும் முயற்சியிலீடுபட்டு இச்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டது.
அதே ஆண்டில் கூட்டுறவு அலுவலகங்களுக்கான அமைச்சு உருவாக்கப்பட்டு இதன் அமைச்சராகக் கௌரவ ஏ.ரத்நாயக்க அவர்கள் நியமிக்கப்பட்டார்.

❋ 1949ல் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திணைக்களமும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திணைக்களமும் ஒன்றினைக்கப்பட்டது.
அதே ஆண்டில் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் கூட்டுத்தாபன அமைப்பு முறைக்கு மாற்றியமைக்கப்பட்டது.
மேலும் இதே ஆண்டில் கூட்டுறவுச் சமஷ்டி வங்கியொன்று உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டது.

- 1949ல் 21ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் திருத்தச் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது.
- கூட்டுறவுச்சங்கப் பிரதி நிதிகள் 6000 பேர் கலந்து கொண்டஅகில இலங்கை மகாநாடு 1950ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்றது.
- 1952ல் இலங்கை மீன் விற்பனைச் சங்கம் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.
அதே ஆண்டில் யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.
மேலும் இதே ஆண்டில் 17ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் விசேட ஏற்பாடுகள் சட்டம் கொண்டுவரப்பட்டது
- 1953ல் பெண்களும் கூட்டுறவப் பரிசோதகர் பதவிக்கு அமர்த்தப் பட்டனர்.
- சிறிய அளவிலான தேயிலைத் தோட்ட உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் 1954ல் காலியிலுள்ள ஹங்கட்டத்துவையில் ஆரம்பிக்கப் பட்டது.
- இலங்கைக் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் 1955ல் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.
அதே ஆண்டில் இலங்கையின் முதலாவது கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை மொறகொல்லையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1956ல் கூட்டுறவுத் திணைக்களத்தில் வெளிப்புறக் கல்வி விஸ்தரிப்புப் பகுதி நிறுவப்பட்டது.
- பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் முயற்சி 1957ல் பதிவு செய்யப்பட்டது.
- மக்கள் வங்கி 1961ல் உருவாக்கப்பட்டது.
- இலங்கை விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 1962ல் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

- இலங்கை கூட்டுறவுக் கைத் தொழில் சங்கமொன்று 1964ல் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

- இலங்கையில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமொன்று 1966ல் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

- இலங்கையின் இறப்பர் சம்மேளனம் 1967ல் ஆரம்பிக்கப்பட்டது.

- 1968ல் இலங்கையின் கூட்டுறவு இயக்கம் சம்மந்தமான விடயங்களை ஆராய்வதற்காக லெயிட்லோதலைமையிலான ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

- 1969ல் இலங்கையின் முதலாவது மரண சகாய கூட்டுறவுச் சங்கம் காலி மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்டது.

- கூட்டுறவுச் சங்கங்களுக்கான 35ஆம் இலக்க திருத்தச் சட்டம் 1970ல் கொண்டுவரப்பட்டது.
  அதே ஆண்டில் வெயிட்லோ ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்திச் சங்கமொன்று 1971ல் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

- 1972ல் இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம் புணரமைக்கப்பட்டு ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை உருவாக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டமை.
  அதே ஆண்டில் கூட்டுறவுச் சேவையாளர் ஆணைக்குழு அமைக்கப்பட்டது.
  இதே ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான 5ஆம் இலக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதில் இதற்கு முன்னிருந்த திருத்தச் சட்ட மூலங்கள் பல உள்ளடக்கப்பட்டும் அகற்றப்பட்டும் முழுமையான சட்ட வடிவமாக அமைந்தது.

- 1973ல் கூட்டுறவு முகாமை சேவை நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது.

* 1976ல் கூட்டுறவு வியாபார நிலையங்களை நவீன மயப்படுத்தி ஊக்குவிக்கப்பட்டது.
  அதே ஆண்டில் கொடுப்பனவு முறை கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

* கூட்டுறவு முயற்சி பற்றி ஆராய்ந்து சிபாரிசு செய்வதற்காக கூட்டுறவுப் புணரமைப்புக் குழு (தேவநாயகம் குழு) 1978ல் நியமிக்கப்பட்டது.
  அதே ஆண்டில் உணவுப் பங்கீட்டுப் புத்தக முறை ஒழிக்கப்பட்டு உணவு முத்திரைத் திட்டம் அமுலாக்கப்பட்டு உணவு முத்திரைகளுக்குப் பொருள் வழங்கும் நிறுவனமாகப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நியமிக்கப்பட்டது.

* 1983ல் 32ஆம் இலக்க கூட்டுறவுத் திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.
  அதே ஆண்டில் 37ம் இலக்க சட்டத்தின் படி கூட்டுறவு முகாமைச் சேவை நிலையம் இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம் என உருவாக்கப்பட்டது.

* 1991ல் அதாவது 1991. 05. 06ல் 40000 கூட்டுறவு ஊழியர்கள் அடங்கிய ஜனாதிபதி கலந்து கொண்ட மகாநாடு ஒன்று நடைபெற்றது.
  இதே ஆண்டில் 11ம் இலக்கத்திருத்தச் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது.
  மேலும் இதே ஆண்டில் ஜனசவியத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக வறுமை ஒழிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

* 1994ல் அதாவது 1994.04.26ல் 3ஆவது ஆசிய பசுபிக் நாடுகளின்கூட்டுறவு ஒன்றியத்தின் மாகாநாடுஇடம் பெற்றது.

* சமுர்த்தித் திட்டத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக வறுமை ஒழிப்புத் திட்டம் 1995ல் ஆரம்பிக்கப்பட்டது.

## மாதிரி வினா விடைகள்

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(1) இலங்கையின் முதலாவது கூட்டுறவுச் சங்கம் பதியப்பட்ட ஆண்டு?
1) 1906 2) 1909 3) 1912 4) 1913

(2) இலங்கையின் முதலாவது கூட்டுறவுச் சங்கச் சமாசம் பதிவு பெற்ற ஆண்டு?
1) 1924 2) 1949 3) 1926 4) 1920

(3) அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனமும், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டு?
1) 1945 2) 1949 3) 1970 4) 1972

(4) கூட்டுறவுத் திணைக்களத்தால் நடாத்தப்படும் "திருப்பொலி" சந்தை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1) 1993 2) 1992 3) 1996 4) 1990

(5) வட பகுதியில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க டாக்டர். என்.எம்.பெரேரா வழிவகுத்த ஆண்டு?
1) 1970 2) 1971 3) 1972 4) 1973

(6) அனைத்துலகக் கூட்டுறவு ஒன்றியம் 1995ல் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய இடம்?
1) சுவிற்சலாந்து 2) லண்டன்
3) பெரிய பிரித்தானியா 4) டெல்கி

(7) அனைத்துலக கூட்டுறவு ஒன்றியத்தின் தற்போதய தலைமைப் பணிமனை?
1) லண்டன் 2) ஜெனிவா
3) றோம் 4) ஸ்ரொக்போசறாம்

(8) இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் அறிமுகப் படுத்தக் காரணமாயிருந்தவர்?
1) கல்வேட் 2) குறோபேட்
3) சேர்.ஹென்றிமக்கலம் 4) டபிள்யூ.எச. கம்பல்

(9) ஆசிய பசுபிக் வலயக் கூட்டுறவு அமைச்சர்களின் எத்தனையாவது மகாநாடு இலங்கையில் 1994ல் நடைபெற்றது?
1) 2வது 2) 3வது 3) 4வது 4) 1வது

(10) இந்தியாவில் எவ்வகையான உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் சர்வதேச ரீதியில் புகழ் பெற்றது?
1) சீனி உற்பத்தி 2) பால் உற்பத்தி
3) விவசாய உற்பத்தி 4) மீன் உற்பத்தி

(11) கூட்டுறவுப் பண்டகசாலை களஞ்சிய அமைப்பு முறையினைப் பரீட்சார்த்தகரமாக அறிமுகம் செய்த கௌரவ அமைச்சர்?
1) பிலிப் குணவர்த்தன 2) கே.கே. சூரியராய்ச்சி
3) என்.எம்.பெரேரா 4) எ.ரட்ணாயக்கா

(12) முதல் கூட்டுறவுச் சங்கம் இங்கிலாந்தில் பதிவுபெறுவதற்கு முன்னோடியாக இருந்த சட்டம்?
1) வறுமை நிவாரணச் சட்டம் 2) நட்புறவுச் சட்டம்
3) தொழிற்சங்கச் சட்டம் 4) கூட்டுறவுச் சட்டம்.

(13) அகில இலங்கை கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் முதல் தலைவர்?
1) எட்மன் விஜய சூரிய 2) வீ. வீரசிங்கம்
3) கி.ரகுநாதன் 3) எம்.விக்ரமரத்ன

(14) பொருளாதார வளர்ச்சியில் 'அமெரிக்கா' முன்னிலைப்படுத்தப்படுவது போல் கூட்டுறவுத் துறை வளர்ச்சியில் முன்னிலைப்படுத்தப் படுவது?
1) கனடா 2) சுவீடன் 3) ஜப்பான் 4) இங்கிலாந்து

(15) கூட்டுறவு இயக்கத்தின் பொன் விழா கொண்டாடப் பட்ட ஆண்டு?
1) 1961 2) 1975 3) 1986 4) 1992

(16) இலங்கையின் தேசிய மட்டக் கூட்டுறவாளர் மகாநாடு நடைபெற்ற ஆண்டு?
1) 1914 2) 1919 3)1929 4) 1913

(17) இலங்கையின் கூட்டுறவுக் கல்லூரி பொல் கொல்லையில்செயற்படத் தொடங்கிய காலம்?
1) 1.10.30 2) 1.3.45 3) 1.12.45 4) 30.9.42

(18) வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலம்?
1) 22.5.90 2) 22.5.91 3) 22.5.89 4) 22.4.90

(19) கொழும்புப் பண்டகசாலைக் கூட்டுறவுச் சங்கத்தால் வெளியிடப்பட்ட மாதாந்த சஞ்சிகை?
1) ஐக்கியதீபம் 2) சமுபகாரய
3) கொழும்புக் கூட்டுறவாளர் 4) கொழும்பு நாணயம்

(20) விரிவுபடுத்தப்பட்ட கடன் திட்டமும் சிற்றூர் அபிவிருத்திக் கடன் திட்டமும் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு?
1) 1967 2) 1968 3) 1978 4) 1962

(21) இலங்கைக் கூட்டுறவு சமஷ்டி வங்கி நிறுவப்பட்ட ஆண்டு?
1) 1929 2) 1931 3) 1939 4) 1947

(22) இலங்கையில் ப.நோ.கூ. சங்கத்தின் முன்னோடிக் கூட்டுறவுச் சங்கமெனக் கருதப்படக் கூடியது?
1) பண்டக சாலைக் கூட்டுறவுச் சங்கம்.
2) பொதுச்சேவைகள் கூட்டுறவுச் சங்கம்.
3) தெங்கு உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்.
4) எதுவுமில்லை.

(23) அனைத்துலகக் கூட்டுறவு ஒன்றியத்தின் பிராந்திய அலுவலகங்கள்?
1) 03 2) 05 3) 07 4) 04

(24) இலங்கைக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்ட ஆண்டு?
1) 1943 2) 1949 3) 1945 4) 1953

(25) இங்கிலாந்தில் றோச்டேல் முன்னோடிகளால் கடைப்பிடிக்கப்பட்டதாகக் கருதப்படக் கூடிய

கொள்கைகள்?
1) 08 2) 07 3) 10 4) 12

(26) கிராமிய வங்கிகளை அமைக்கும் திட்டத்தை மக்கள் வங்கி அறிமுகப்படுத்திய ஆண்டு?
1) 1963 2) 1964 3) 1966 4) 1969

(27) இலங்கை முகாமைச் சேவை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1) 1973 2) 1970 3) 1983 4) 1984

## வினா விடை

### வெற்றிடங்களை நிரப்புக.

1) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் விசேட பொதுக் கூட்டமொன்றுக்கு ஏழு நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல் வழங்கப்படல் வேண்டும்.

2) 1992 ம் ஆண்டின் 11ம் இலக்க சட்டமூலம் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கொன்றின் பெறுமதி ரூபா 100/- ஆக்கப்பட்டது.

3) நடுத்தீர்ப்பு ஒன்றுக்கு எதிராகச் செய்யப்பட வேண்டிய மேன்முறையீடு கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அவர்களுக்கு செய்யப்படல் வேண்டும்.

4) 48 மணித்தியால முன்னறிவித்தல் கொடுத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் பொதுக் கூட்டத்தை அழைக்கும் அதிகாரம் பதிவாளருக்கு உண்டு.

5) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம் 1977 ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

6) இலங்கையின் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான முதலாவது சட்டம் 1911ம் ஆண்டில் இயற்றப்பட்டது.

7) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் அதன் பொது முகாமையாளர் அவர்கள் பிரதான நிருவாகியாகச் செயற்படுவார்.

8) பணியாளர் ஒருவருக் கெதிரான ஒழுக்காற்று விசாரனையில் விசாரனை உத்தியோகத்தரை நியமிக்கும் அதிகாரம் <u>சங்க நிர்வாக சபை</u> க்கு உண்டு

9.10) ஒழுக்காற்று விசாரனைத் தீர்ப்பு ஒன்றுக்கெதிராக பணியாளர் ஒருவர் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவு க்கு அல்லது <u>தொழில் நியாய சபைக்கு</u> மேல் முறையீடு செய்யலாம்.

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி என்பதன் கீழும் பிழையாயின் பிழை என்பதன் கீழும் கோடிடுக.**

11) கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப்பதிவு செய்ய ஆணையாளர் மறுக்குமிடத்து அமைச்சருக்கு மேன் முறையீடு செய்யலாம். (<u>சரி</u>/பிழை)

12) ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் பணியாற்றக் கூடிய பணியாளர்களின் தொகையைத் தீர்மானிக்கும் அதிகாரம் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவுக்கு உண்டு.

(சரி/<u>பிழை</u>)

13) கூட்டுறவுச் சங்கமொன்று தனது சொந்த அங்கத்தவர் களிடமிருந்து திரட்டக் கூடிய ஆகக் கூடிய கடன் தொகை தனியார் கடன் எல்லை (IMCL) எனப் படும். (சரி/<u>பிழை</u>)

14) பொதுச் சபையின் அதிகாரத்தைக் கொண்ட பணிப்பாளர் சபை தற்காலிக பணிப்பாளர் சபை என அழைக்கப்படும். (சரி/<u>பிழை</u>)

15) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்று அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டியது ஏழு நாட்களுக்கு முன்னராகும்

(சரி/<u>பிழை</u>)

16) ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் பின்னுரித்தாளியை நீக்கும் அதிகாரம் கூட்டுறவுச் சங்க அதிகாரிக்கு உண்டு. (சரி/<u>பிழை</u>)

17) கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் ஆக்கப்படும்.
(<u>சரி</u>/பிழை)

18) நம்பிக்கை நிதியத்துக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களால் செலுத்தப்படவேண்டிய உதவித் தொகை 3% ஆகும்.
(சரி/<u>பிழை</u>)

19) சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதத்துடன் மட்டுமே பதிவு செய்யப்படலாம்.
(சரி/<u>பிழை</u>)

20) வம்சாவழிப் பிரசை ஒருவர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவம் பெற முடியாது. (சரி/<u>பிழை</u>)

21) மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய இரு கூட்டுறவுச் சங்கங்களில் ஒருவர் அங்கத்துவம் பெற முடியாது.
(சரி/<u>பிழை</u>)

22) கூட்டுறவுச் சங்கத்தின் பதவி ஒன்றுக்குரிய சம்பள அளவுத் திட்டங்களை நிர்ணயிப்பது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு ஆகும்.
(<u>சரி</u>/பிழை)

23) நடுத்தீர்ப்பு விசாரணை ஒன்றில் எல்லாச் சந்தர்ப்பத்திலும்சங்கமே வழக்காளியாக இருத்தல் வேண்டும் என்றில்லை. (<u>சரி</u>/பிழை)

24) கூட்டுறவுச் சங்கமொன்றின் நடைமுறை விதிகளை நெறியாளர் குழுவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பதிவாளர் அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்டபின் செல்லுபடியாகும்.

(சரி/பிழை)

25) கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நிகழ்ச்சி காரணமாகவே வருடாந்தப் பொதுக் கூட்டம் ஏனைய விசேட பொதுக்கூட்டங்களில் இருந்து வேறு படுத்தபடுகின்றது.

(சரி/பிழை)

26) ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் உச்சக்கடன் எல்லையைத் தீர்மானிப்பது அச்சங்கம் இருவருடங்களாவது தொழிற்பட்டிருத்தல் வேண்டும்.

(சரி/பிழை)

27) கூட்டுறவுச் சங்கமொன்று பதிவு செய்வதற்கு பதிவுக்கு முன்னர் ஆகக் குறைந்தது இரு வருடங்களாவது அச்சங்கம் தொழிற்பட்டிருத்தல் வேண்டும். (சரி/பிழை)

28) கூட்டுறவுச் சங்க கூட்டங்களில் வாக்கெடுக்கப்படும் போது வாக்குகள் இரு பக்க சமமாக வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே தலைவர் வாக்களிக்க முடியும்

(சரி/பிழை)

கூட்டுறவின் சேவையை பெற வாருங்கள்!

## சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



சமூக பொருளாதார அபிவிருத்தியும் கலாச்சாரமும்
கூட்டுறவுக் கல்வி, சித்த மருத்துவம்
பாலர் கல்வியும் போசாக்கும்



பனை, தென்னை அபிவிருத்தியும் மீள்நடுகையும்
உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்
லான்ட் மாஸ்ரர் சேவையும்

கிராமிய வங்கிச் சேவை - கணனி அச்சுப் பதிப்பு
மனையியல் பயிற்சி - மகளிர் தையல் நிலைய சேவை
தொலைத் தொடர்பு சேவை - போட்டோ பிரதி சேவை

**மக்கள் சேவைக்காய் ஒன்றிணைவோம்**

**தொடர்புகட்கு:**
**சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**

**தொலைபேசி : 070-21-2632**

*அரச அலுவலக உபகரணங்கள், காதிதாதிகள்,*
*பாடசாலைப் பிள்ளைகளுக்குரிய உபகரணங்கள்,*
*கொப்பி வகைகள் மற்றும்*
*அச்சகப்பாவனைக்குரிய சகல விதமான பேப்பர் வகைகளும்*

மலிவாகவும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்



யாழ் நகரில் பெற்றுக் கொள்ளக் கூடிய
ஒரே ஒரு ஸ்தாபனம்

# ஆசீர் வணிக நிலையம்

202 ஏ, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

## கூட்டுறவு ஊழியர்களுடன் தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் :-

✠ 1972 ஆம் ஆண்டின் 12ம் இலக்கக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம்.

✠ 1981.12.01 திகதிய 169/8 இலக்க அதி விசேட வர்த்தமானியில்
பிரகடனப்படுத்தப்பட்ட கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச்சட்ட பிரமானங்கள்.

✠ 1982.11.11ம் திகதிய 218/12ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு
வேலையாளர் ஆணைக்குழுச்சட்டப் பிரமானங்கள்.

✠ 1993 ஆம் ஆண்டு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்.

✠ 1993/12/13ம் திகதி 849/07ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்ட (திருத்த) பிரமாணங்கள்.

✠ 1941 ஆம் ஆண்டு சம்பள நியதிச் சபைச் சட்டம் அதன்கீழ் வெளியிடப்படும் சம்பள நியதிச்சபை தீர்மானங்கள்.

✠ 1954 ஆம் ஆண்டு 19ம் இலக்க கடைகள் அலுவலகப் பணியாளர்கள் சட்டம்.

✠ 1956ஆம் ஆண்டு 43ம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்.

✠ 1958ம் ஆண்டு 15ம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்.

✠ 1980ஆம் ஆண்டு 46ம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டம்.

✠ 1983ம் ஆண்டு 12ம் இலக்க பணியாளர் பணிக்கொடைச் சட்டம்.

✠ 1946ம் ஆண்டின் 37ம் இலக்க நிறுவைகள் அளவைகள் சட்டம்.

✠ 1973ம் ஆண்டின் 33ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச்

சட்டம்.

✠ 1980ம் ஆண்டின் 47ம் இலக்க மருந்துப் பொருட்கள் சட்டம்.

✠ 1983ம் ஆண்டு 32ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டம்.

✠ 1992ம் ஆண்டு11ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டம்.

## கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் II "ஆ" பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 1996 பொது அறிவு வினா - விடை

1) கூட்டுறவு இயக்கத்தின் தந்தை என வர்ணிக்கப்படுபவர் யார்? றொபேட் ஓவன்

2) கூட்டுறவு என்பதன் சாதாரணகருத்து யாது? கூடி உழைத்தல்.

3) இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்க வரலாற்றில் கூட்டுறவு முன்னோடிகள் என வர்ணிக்கப்படும் குழுவினர் யார்?
முதலாவது நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவிய 28 நெசவுத் தொழிலாளர்கள்.

4) உலகில் முதலாவது கூட்டுறவுச் சங்கம் எங்கே பதியப்பட்டது? இங்கிலாந்தில்

5) இது எந்தச் சட்டத்தின் கீழ் பதியப்பட்டது? நட்பறவுச் சட்டத்தின் கீழ்.

6) றொச்டேல் முன்னோடிகள் நிறுவிய கூட்டுறவுச் சங்கம் எந்த வகையைச் சார்ந்தது? நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்.

7) இது எந்த ஆண்டில் உருவாக்கப்பட்டது?
1844ம் ஆண்டு

8) கூட்டுறவுக் கொள்கைகளை வரையறைசெய்து வெளியிடும் நிறுவனம் எது?
சர்வதேச கூட்டுறவு அமையம்

9) இது எந்த ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது?
1895ம் ஆண்டு

10) தற்போது நடைமுறையில் உள்ள கூட்டுறவுக் கொள்ளைகள் எத்தனை? 7

11) இக் கொள்கைகள் எப்போது பிரகடனப்படுத்தப் பட்டவை? 1995ம் ஆண்டு

12) சர்வதேச கூட்டுறவு அமையம் எங்கே தனது தலைமை அலுவலகத்தை நிறுவியது? ஜெனிபாவில்

